# பாவேந்தர்

*தமிழுக்கும் அமுது என்று பேர் - அந்தத்*
*தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்*

என்று தமிழ் மீது தான் கொண்ட பற்றினை வெளிப்படுத்தினார் பாவேந்தர். இவர் 29.04.1891ஆம் ஆண்டு புதுச்சேரியில் பிறந்தார். இவருடைய தந்தையார் கனகசபை. தாயார் இலக்குமி அம்மாள். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம். பாவேந்தர் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார். இதனால் தனது பதினெட்டாவது அகவையிலேயே அரசினர் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். இசை உணர்வு கொண்ட இவர் சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை அழகாக எழுதத் தொடங்கினார். அவற்றைத் தம் தோழர்களுக்கும் பாடிக்காட்டுவார். இவரது எழுச்சிமிக்க பாடல்களால் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் என அழைக்கப்பட்டார். பாரதியாரின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட இவர் தனது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.

இவரது தமிழ் உணர்வுப் பாடல்கள் தூங்கிக் கிடந்த பல தமிழ் நெஞ்சங்களைத் தட்டி எழுப்பின. தமிழர் தன்மானத்துடன் வாழவேண்டும்; மூட நம்பிக்கைகளைக் கைவிட வேண்டும்; பகுத்தறிவுடையவர்களாக வாழ வேண்டும்; போன்ற பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். இதனால் இக்கருத்து வெளிப்படும் பல பாடல்களை எழுதினார். இயற்கை அழகைப்பற்றி அழகின்சிரிப்பு என்ற நூலிலும் கல்வியின் தேவையை வலியுறுத்தி இருண்டவீடு என்ற நூலிலும் ஒரு நல்ல குடும்பம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் குடும்பவிளக்கு என்ற நூலிலும் சிறப்பாக எழுதியுள்ளார். தமிழ் அறிவும் விடுதலை உணர்வும் கொண்ட இவர் 21.04.1964 அன்று தனது எழுபத்துநான்காவது அகவையில் இயற்கை எய்தினார். இன்று அவர் எம்முடன் இல்லா விட்டாலும் அவரது புரட்சிப்பாடல்கள் மூலம் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.